# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2270 - 2022 මාර්තු මස 04 වැනි සිකුරාදා - 2022.03.04

*2270 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 392 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 395 |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, மாச்சு மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, மாச்சு மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# அரசாங்க அறிவித்தல்கள்

## கல்வி அமைச்சு

எனது இலக்கம் : ஈடி/1/8/4/கொ/இரு/சீல/15

*1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்கத்தைக் கொண்ட பிரிவெனாக் கல்விச் சட்டத்தின் 26, 27 மற்றும் 33 ஆம் வாசகங்களின் கீழ் உருவாக்கப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கத்தைக் கொண்ட பிரிவெனாக் கல்விக் கட்டளை இலக்கம் 03 (06) (அ) வின் கீழ் பௌத்த சீலமாதாக் கல்வி நிறுவனத்தின் பணிகளுக்கான அறிவித்தல்*

பாதுக்கை, சேனாநாயக்க பகுதி, மாத்திக்கமாதா மடத்தில் கொ/ஸ்ரீ சந்திரோதய இருமொழி சீலமாதா நிறுவனத்தை அமைப்பதற்கும், அந்த இரு மொழி பௌத்த சீலமாதா கல்வி நிறுவனத்தை 2020.11.09 ஆந் திகதி முதல் முறையாக பதிவு செய்து தருமாறும் மடாதிபதி கௌரவ பாதுக்கே சுமித்ரா சில்மாதா அம்மையார் கோரிக்கை விடுத்துள்ளார். எனவே அந்த பௌத்த சீலமாதா கல்வி நிறுவனத்தை முறையாக பதிவு செய்வதற்கு முன் 1980 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கத்தைக் கொண்ட பிரிவெனாக் கல்விக் கட்டளை 03 (06) ஆம் இலக்கத்தின் கீழ் விரோதங்கள் அல்லது அவதானிப்புகள் இருக்குமாயின் இந்த அறிவித்தல் வெளியாகி (30) நாட்களுக்குள் எனக்கு அறியத்தருமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பேராசிரியர் கே. கபில சீ. கே. பெரேரா,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல,
2022, பெப்புருவரி 23.

03-43

---

பதிவாளர் நாயகம் திணைக்களம்

## காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமாக III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2022.03.04 தொடக்கம் 2022.03.18 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு தெல்கந்தை காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2022.03.25 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/49/2020/ஏடு. தயா,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| நிரல் I<br>பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள் | நிரல் II<br>காணி பற்றிய விபரம் | நிரல் III<br>பதிவு செய்யப்பட்ட உறுதிகள் பற்றிய விபரம் |
|---|---|---|
| கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு காணிப் பதிவகத்தின் தெஹிவளை பிரிவின் 59 ஆவது புத்தகத்தின் 17, 18 ஆவது ஏடுகள். | மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தின், பள்ளேபற்று சல்பிட்டி கோறளையில் தெஹிவளையில் அமைந்துள்ள "அலுத்வத்த அல்லது எலபடவத்த" என்னும் காணிக்கான எல்லைகள்:<br>வடக்கு : B 19 (பாதைக்காக ஒதுக்கப்பட்ட பகுதி) ;<br>கிழக்கு : B 04 ;<br>தெற்கு : 04 M 01 ;<br>மேற்கு : புகையிரத நிலைய வீதிக்காக ஒதுக்கப்பட்ட நிலப்பகுதி.<br>விஸ்தீரணம் : 00ஏ.00றூ.25.06பே. | 1. H. த சில்வா பிரசித்த நொத்தாரிசினால் 1984.03.14 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 752 உடைய அறுதி உறுதி.<br>2. H. ஜயவர்தன பிரசித்த நொத்தாரிசினால் 2004.10.11 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 50 உடைய அறுதி உறுதி.<br>3. A. A. H. W. ஜயசேகர பிரசித்த நொத்தாரிசினால் 2006.12.20 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 3818 உடைய அறுதி உறுதி.<br>4. W. A. W. D. வெலிஅங்க பிரசித்த நொத்தாரிசினால் 2014.04.25 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 831 உடைய ஈட்டு உறுதி. |

03-44

---

பதிவாளர் நாயகம் திணைக்களம்

**காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**
**(அத்தியாயம் 120)**

கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமாக III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2022.03.04 தொடக்கம் 2022.03.18 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு நிக்கவெரட்டிய காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2022.03.25 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/86/2021/ஏடு. தயா,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| *நிரல் I*<br>*பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள்* | *நிரல் II*<br>*காணி பற்றிய விபரம்* | *நிரல் III*<br>*பதிவு செய்யப்பட்ட உறுதிகள் பற்றிய விபரம்* |
|---|---|---|
| குருநாகல் மாவட்டத்தின் நிகவெரட்டிய காணிப் பதிவகத்தின் E பிரிவின் *143* ஆவது புத்தகத்தின் *164* ஆவது ஏடு. | வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தின், மஹவ பிரதேச செயலகப் பிரிவின் 200 - பஹல பலல்ல கிராம அலுவலர் பிரிவில் மஹவ மாகாண சபை நிறுவனத்தில் வன்னிஹத்பற்று இல் கடுவன்னா கோறளையில் கடவலே இல் அமைந்துள்ள "பாலம காவ ஹேன, எல காவ ஹேன" என்னும் காணிக்கான எல்லைகள்:<br>வடக்கு : ஹீன் கால்வாய் இற்கு ஒதுக்கப்பட்ட நிலப்பகுதி ;<br>கிழக்கு : ஹீன் கால்வாய் இற்கு ஒதுக்கப்பட்ட நிலப் பகுதி ;<br>தெற்கு : காணித்துண்டு இலக்கம் *28* ;<br>மேற்கு : பாதை.<br>விஸ்தீரணம் : 01ஏ.03றூ.11பே. | *1.* R. B. பலல்ல பிரசித்த நொத்தாரி சினால் *1940.07.14* ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் *1713* உடைய அறுதி உறுதி.<br>*2.* R. B. பலல்ல பிரசித்த நொத்தாரி சினால் *1941.04.27* ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் *1825* உடைய அறுதி உறுதி.<br>*3.* அரசாங்க அதிபரின் *1936.06.06* ஆந் திகதிய அறுதி உறுதி.<br>*4.* D. B. வெலகெதர பிரசித்த நொத்தாரி சினால் *1971.12.18* ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் *2365* உடைய நன்கொடை உறுதி. |

*03-66*

---

பதிவாளர் நாயகம் திணைக்களம்

**காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**
**(அத்தியாயம் 120)**

கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமாக III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2022.03.04 தொடக்கம் 2022.03.18 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடு வதற்கு அநுராதபுரம் காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2022.03.25 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/58/2021/ஏடு. தயா,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| *நிரல் I*<br>*பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள்* | *நிரல் II*<br>*காணி பற்றிய விபரம்* | *நிரல் III*<br>*பதிவு செய்யப்பட்ட உறுதிகள் பற்றிய விபரம்* |
|---|---|---|
| அநுராதபுரம் மாவட்டத்தின் அநுராதபுரம் காணிப் பதிவகத்தின் A பிரிவின் 307 ஆவது புத்தகத்தின் 125 ஆவது ஏடு. | வடமத்திய மாகாணத்தின், அநுராதபுரம் மாவட்டத்தின், நுவரகம் பலாத்த பற்று கனதார கோறளையில் அநுராதபுரம் நகரத்தின் முதலாவது கட்டத்தில் வங்கி பிரதேசத்தின் நகர சபை இல்லம் 15 - கி. அ. - 14A நுவர வாவியில் அமைந்துள்ள அனுமதிப்பெற்ற அளவீட்டாளர் அநுராதபுரம் நகர சபையின் வேலை அதிகாரி எஸ். விஜேரத்ன அவர்களினால் அளவிட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் யூ. சீ. 01- 1979, நவெம்பர் 25 ஆந் திகதிய அளவீட்டின் லொட் 15 இற்கான எல்லைகள்:<br>வடக்கு : காணித்துண்டு இலக்கம் 16 ;<br>கிழக்கு : பாதை ;<br>தெற்கு : காணித்துண்டு இலக்கம் 14 ;<br>மேற்கு : காணித்துண்டு இலக்கம் 13, காணித்துண்டு இலக்கம் 12.<br>விஸ்தீரணம் : 00ஏ.00றூ.12.06பே. | 1. தொன் பியசேன கருணாரத்ன பிரசித்த நொத்தாரிசினால் 1979.12.14 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 09 உடைய அறுதி உறுதி. |

03-67

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## சம்பத் வங்கி பீ. எல். சீ.

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கொரல் செஃப்ரன் (பிறைவேட்) லிமிடெட்
கணக்கு இல. 0086 1000 2081

2020.11.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கம்பஹா பிரசித்த நொத்தாரிசுவான ஏ. டபிள்யு. டீ. எம். வித்தானகே என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, மே 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 623 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நில மனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டார் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பனி சட்டங்களுக்கு அமைவாக நேர்த்தியாக கூட்டிணைக்கப்பட்ட இல. PV 108730 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனியான பெயர் மற்றும் வடிவில் "கொரல் செஃப்ரன் (பிறைவேட்) லிமிடெட்" கடன்பட்டார் எனும் வகையில் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், இல. 623 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லு படியாகும் ரூபா நாற்பத்தி ஆறு கோடியே அறுபத்தி இரண்டு இலட்சத்து எண்ணாயிரத்து முந்நூற்றி இருபத்தி ஐந்து ரூபா ஏழு சதம் (ரூபா 466,208,325.07)

2020, நவெம்பர் 11 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட ரூபா நாற்பத்தி ஆறு கோடியே அறுபத்தி இரண்டு இலட்சத்து எண்ணாயிரத்து முந்நூற்றி இருபத்தி ஐந்து ரூபா ஏழு சதம் (ரூபா 466,208,325.07) 2020, நவெம்பர் 12 ஆந் திகதி முதல் இல. 623 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை முப்பத்தி எட்டு கோடியே பதின்மூன்று இலட்சம் ரூபா (ரூபா 381,300,000.00) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate (AWPLR + 2.5%) + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து (2.5%) மேலும் இரண்டு கோடியே எழுபத்தி ஆறு இலட்சம் ரூபா (ரூபா 27,600,000.00) இத்துடன் மேலதிகமாக வட்டியாக ஆண்டொன்றுக்கு பன்னிரெண்டு வீதம் (12%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 623 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.”.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே பல்லே பத்துவின் கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் மோதரை கிராம அலுவலர் பிரிவின் மோதர வோட் இல. 02 மோதர அலுத்மாவத்தை வீதியில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 626 என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. செல்வரத்னம் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, செத்தெம்பர் 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 10463 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் XA எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடகிழக்கு: பிரவேச மார்க்கம் (3 அடி அகலம் /0.9 மீற்றர்) ; தென்கிழக்கு: அலுத் மாவத்தை வீதி வரிமதிப்பீட்டு இல. 626/ 1, இல. 37A/ 19710 ஐ ஏற்ற வரைபடத்தின் லொட் B ; தென்மேற்கு : XA2 (இங்கு தற்காலிக வீதி ரேகையில் அமைந்த காணி) மற்றும் வடமேற்கு: XA1 (இங்கு அனுமதிக்கப்பட்ட வீதி ரேகையில் அமைந்த காணி), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் ஒன்பது தசம் ஐந்து மூன்று பேர்ச் (0ஏ.1றூ.9.53பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 10463 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 06/135 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கூறப்பட்ட அலுத்மாவத்தை வீதியில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 626 என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. செல்வரத்னம் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, செத்தெம்பர் 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 10463 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் XA1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடகிழக்கு: பிரவேச மார்க்கம் (3 அடி/அகலம் 0.9 மீற்றர்) ; தென்கிழக்கு: இங்கு லொட் XA; தென்மேற்கு : வீதி மற்றும் வடமேற்கு: அலுத் மாவத்தை வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று தசம் ஒன்று சைபர் பேர்ச் (0ஏ.0றூ.3.10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 10463 எனும் வரைப்படத்திற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 143/109 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்கூறப்பட்ட அலுத்மாவத்தை வீதியில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 626 என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. செல்வரத்னம் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, செத்தெம்பர் 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 10463 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் XA2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடகிழக்கு: இங்கு லொட் XA; தென்கிழக்கு: அலுத் மாவத்தை வரிமதிப்பீட்டு இல. 622/ 1; தென்மேற்கு : வீதி மற்றும் வடமேற்கு : அலுத் மாவத்தை வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் நான்கு தசம் ஐந்து சைபர் பேர்ச் (0ஏ.0றூ.4.50பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 10463 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 14/110 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

03-02

## கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்படி பின்வரும் தீர்மானமானது (இதனகத்துப் பின்னர் யூனியன் வங்கி எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால், 2021, நவெம்பர் 30 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தின்போது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*"(இதனகத்துப் பின்னர் சில சந்தர்ப்பங்களில் "கடப்பாடுடையவர்கள்/ ஈடுவைத்தவர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் "அமரசிறி" யஹலபெத்த, ஹறுபுதள என்ற முகவரியைச் சேர்ந்த நவரத்னே முதியன்சேலாகே உதய குமார (தேசிய அடையாள அட்டை இல. 792853915V) மற்றும் வீரவன்னி முதியன்சேலாகே மஞ்சுலா மானெல் ஜயதிலக (தேசிய அடையாள அட்டை இல. 787183590V) என்பவர்கள் (இதனகத்துப் பின்னர் "தவணைக் கடன் 1" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) ரூபா 10,000,000.00 தொகை மற்றும் (இதனகத்துப் பின்னர் "தவணைக் கடன் 2" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) 338,352.22 ரூபா தொகை என்பவற்றை (இதனகத்துப் பின்னர் யூனியன் வங்கி என அழைக்கப்படுகின்ற) PB676PQ கம்பனிப் பதிவிலக்கத்தையுடைய கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ இலிருந்து பெற்றுக் கொண்டிருப்பதாலும், அத்தோடு (இதனகத்துப்பின்னர் கூட்டாக "சொல்லப்பட்ட நிதி வசதிகள்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) சொல்லப்பட்ட தவணைக் கடன் வசதிகள் காரணமாக சொல்லப்பட்ட யூனியன் வங்கிக்கு செலுத்த வேண்டிய சொல்லப்பட்ட பத்து மில்லியன் ரூபா (ரூபா 10,000,000.00) தொகை மற்றும் அதன் மீதான வட்டி கொடுப்பனவுகளுக்கு பிணைப்பொறுப்பாக இதன் அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்ட ஆதனத்தை பத்து மில்லியன் ரூபா (ரூபா 10,000,000.00) தொகைக்காக பிரசித்த நொத்தாரிசு எம். சீ. ஜயராணி பீரிஸ் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.12.24 ஆந் திகதியுடைய 22743 ஆம் இலக்க முதன்மை ஈட்டுமுறியை கடப்பாடுடையவர்கள்/ ஈடுவைத்தவர்கள் நிறைவேற்றி அடமானம் செய்திருக்கின்றனர்.*

*அத்தோடு பின்வரும் தொகைகள் கடப்பாடுடையவர்கள்/ ஈடுவைத்தவர்களிடமிருந்து யூனியன் வங்கிக்கு வருமதி யாகவும் மற்றும் சேர வேண்டியதாக உள்ளது.*

(i) *2021.03.17 ஆந் திகதியில் உள்ளவாறு மேலே சொல்லப்பட்ட தவணைக் கடன் 1 மீது நிலுவையாக உள்ள ஒரு கோடியே பத்து இலட்சத்து எண்பதாயிரத்து ஐநூற்று பதினொரு ரூபா எண்பத்தொரு சதம் (ரூபா 11,080,511.81) தொகை மற்றும் பிரதான தொகையாகிய தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து முந்நூற்று எண்பத்திரண்டு ரூபா எழுபத்தொரு சதம் (ரூபா 9,925,382.71) தொகை மீது 2021.03.18 ஆந் திகதி முதல் வருடத்திற்கு 19% சதவீதத்திற்கு மேலதிக வட்டியும், மற்றும்*

(ii) *தவணைக் கடன் 2 மீது நிலுவையாக உள்ள மூன்று இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து முந்நூற்று ஐம்பத்திரண்டு ரூபா இருபத்திரண்டு சதம் (ரூபா 3,38,352.22) தொகையும் ஆகும்.*

*யூனியன் வங்கிப் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ், சொல்லப்பட்ட பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் செயல்படுவதனாலும், சொல்லப்பட்ட கடப்பாடுடையவர்கள்/ ஈடுவைத்தவர்கள் மேற்குறித்த கடன் நிலுவைகளை அல்லது அவற்றின் பகுதிகளை கொடுத்துத் தீர்ப்பதில் தவணை தவறியுள்ளனர் எனத் திருப்திப்பட்டுள்ளதனாலும், சொல்லப்பட்ட நிதி வசதிகளின் காரணமாக 2021.03.18 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை மேலே சொல்லப்பட்ட வீதங்களில் சொல்லப்பட்ட நிதிவசதிகளின் உரிய மூலதன நிலுவைத் தொகை மீது மேலதிக வட்டியுடன் சொல்லப்பட்ட நிதிவசதிகளின் காரணமாக கடப்பாடையவர்கள்/ ஈடுவைத்தவர்களிடமிருந்து யூனியன் வங்கிக்கு வருமதியானதும் மற்றும் சேர வேண்டியதுமான மேலே சொல்லப்பட்ட தொகைகளையும் மற்றும் சொல்லப்பட்ட 22743 ஆம் இலக்க ஈட்டுமுறியின் நியதிகளினாலும் மற்றும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரமும் யூனியன் வங்கிக்கு மீட்டுக்கொள்வதற்கு உரித்துடைய அனைத்து ஏனைய தொகைகளையும் பெறப்பட்ட தொகைகள் (ஏதேனும் இருந்தால்) அவற்றைக் கழித்து ஏனைய தொகைகளை மீட்டுக்கொள்வதற்காக, இதன் ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு எம். சீ. ஜயராணி பீரிஸ் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.12.24 ஆந் திகதியுடைய 22743 ஆம் இலக்க முதன்மை ஈட்டு முறியின் கீழும் மற்றும் அதன் பயனாலும் யூனியன் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட ஆதனத்தை சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க*

*சட்டத்தின் நியதிகளினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளராகிய L. B. சேனாநாயக்க ஏல விற்பனையாளருக்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிப்பதற்கு இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".*

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

*ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில், மெடிகிந்த மஹபலாத கோரளை, ஹபுதளை பிரதேச செயலகப் பிரிவு மற்றும் ஹபுதளை பிரதேச சபை பிரிவிற்குள், ஹபுதளேகம கிராம அலுவலர் பிரிவில், யஹலபெத்த கிராமத்தில் அமைந்துள்ள "கல்பட்டியேவத்த" அல்லது "ஹபுகஹவத்த" என அழைக்கப்படுகின்ற காணியின் (உரிமம் பெற்ற நில அளவையாளர் பீ. டபிள்யூ. நந்தசேன அவர்களால் தயாரிக்கப்பட்ட 2003.10.11 ஆந் திகதியுடைய 4570 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் A இன் ஒரு மீள் அளவீடாக இருக்கின்ற) உரிமம் பெற்ற நில அளவையாளர் பீ. டபிள்யூ. நந்தசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2018.01.31 ஆந் திகதியுடைய 7509 ஆம் இலக்க வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 1 என விபரிக்கப்பட்டது என்பதோடு சொல்லப்பட்ட துண்டம் 1 பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது - வடக்கு : டீ. எம். ரத்னபால பண்டார மற்றும் எச். கே. சந்த்ரசேகர என்பவர்களால் உரிமைகோரப்படுகின்ற காணிகள் ; கிழக்கு : எச். கே. சந்த்ரசேகர என்பவரால் உரிமை கோரப்படுகின்ற காணி மற்றும் பாதை ; தெற்கு : தியதலாவ வீதி மற்றும் மேற்கு : டபிள்யூ. எம். சுமனாவதி என்பவரால் உரிமை கோரப்படுகின்ற காணி மற்றும் பாடசாலை மைதானம், அத்தோடு ஒரு ஏக்கர் பதினெட்டு பேர்ச் (01ஏ.00றூ.18பே.) அல்லது பூச்சியம் தசம் நான்கு ஐந்து பூச்சியம் ஹெக்டெயார் (0.450ஹெ.) விஸ்தீரணத்தைக் கொண்டு யஹலபெத்த முதல் தியதலாவ வீதிக்கு இணைக்கப்பட்ட அணுகு வழியைப் பயன்படுத்துவதற்கான உரிமையை கொண்டு மற்றும் அதனகத்தேயுள்ள சகலதையும் உள்ளடக்கி பதுளை காணிப் பதிவகத்தில் W/09/138 பிரிவு/இருமடி இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*இனோகா ஜயவர்தன,*
*பணிப்பாளர் சபைச் செயலாளர்.*

*03- 07*

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

*கிளை : கொட்டிகாவத்த*
*கடன் கணக்கு இலக்கம் : 2315630*
*ஓசன்ட மோட்டர்ஸ்*

*2022, சனவரி 28 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையின் கூட்டத்தில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது :*

*"அத்துடன் கடன்பட்டவராகிய அங்கொட இல. 238/A 53, சிறிசுமண மாவத்தையில் "ஓசன்ட மோட்டர்ஸ்" என்ற பெயர் வடிவகைக் கொண்ட வியாபார நிறுவனத்தின் உரிமையாளரான இல. 94/1, ராகுல வீதி, முல்லேரியா புதிய நகரத்தைச் சேர்ந்த றோஷான் பிரசன்னா புன்ஜிஹேவா என்பவர் பெற்ற கடனை திரும்ப செலுத்தத் தவறியதால் கொழும்பைச் சேர்ந்த நொத்தாரிசு ஜே. எம். பி. எஸ். ஜெயவீர என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு கொமர்ஷல் வங்கியின் சிலோன் பீ. எல். சீ யில் அடமானப் பத்திர இலக்கங்கள் 3347, 22.06.2017, கொழும்பைச் சேர்ந்த நொத்தாரிசு எம். ஐ. அல்விஸ் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு கொமர்ஷல் வங்கியின் சிலோன் பீ. எல். சீ. யில் அடைமானப் பத்திர இலக்கங்கள் 822, 04.10.2018, திரும்ப செலுத்த தவறியதால் இது 2021, ஏப்பிறல் 19 வரையான காலப் பகுதியில் வட்டியுடன் கொமர்ஷல் வங்கியின் சிலோன் பீ. எல். சீ. க்கு தருமதியாக உள்ள கூறப்பட்ட அடைமானத்தால் ஒரு கோடி அறுபத்தி ஒன்பது இலட்சத்து ஆறாயிரத்து நானூற்று இருபது ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூபா 1,69,06,420.84) (கடன் கணக்கு இல. : 2315630) கொமர்ஷல் வங்கியின் சிலோன் பீ. எல். சீ. யில் திரும்பச் செலுத்த தவறியதால் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் (விஷேட ஏற்பாடுகள்) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆம் சிறப்புச் சட்டப்படி கீழ் குறிக்கப்பட்ட அட்டவணையில் சபை இயக்குநரின் தீர்மானத்திற்கு அமைய அடைமானப் பத்திர இலக்கங்கள் 3347 மற்றும் 882 கொண்ட சொத்தை கொமர்ஷல் வங்கியின் சிலோன் பீ. எல். சீ. யினரால் அங்கீகாரம் பெற்ற ரீ. என்ட் எச். ஒக்சன் அனுமதிபெற்ற ஏலதாரர் மற்றும் நீதிமன்ற ஆணையாளர், திரு. எம். எச். டி. கருணாரத்ன, இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்பவரால் பொது ஏல விற்பனை மூலம் விற்கப்பட்ட மேற்கூறப்பட்ட ஒரு கோடி அறுபத்தி ஒன்பது இலட்சத்து ஆறாயிரத்து நாநூற்று இருபது ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூபா 1,69,06,420.84) தொகையுடன் 2021, ஏப்பிறல் 20*

முதல் விற்பனை நாள் வரையான 16.5% வட்டியாக ரூபா 1,18,35,000.00 விளம்பர தொகை உட்பட மற்றும் வேறு ஏதேனும் செலவுகளும் (ஏனையவும்) அறவிடப்படும்.

**மேல் குறிப்பிட்ட அட்டவணையில் கூறப்பட்ட விபரங்கள் :**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அளுத்குரு கோரளை, அம்பத்தலென் பகல கொட்டிகாவத்த-முல்லேரியா பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மற்றும் கொலன்னாவ பிரதேச செயலாளர் பிரிவில் மல்புர 505A கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட அங்கொடயில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டு இல. 49, ராகுல வீதி, "கஹடகஹாவத்த" என்றழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் ஆர். டீ. அபேசிங்க என்பவரினால் 2009.10.27 இல் தயாரிக்கப்பட்ட நில வரைபட இல. 1693 துண்டு 1C சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டு - வடக்கு : துண்டுகள் 1A மற்றும் 1B ; கிழக்கு : ஏ. பத்திராஜ என்பவரின் காணியும் ; தெற்கு : துண்டு 1D ; மேற்கு : கே. ஏ. திலக்கரத்ன என்பவரின் காணியும் எல்லையாக உள்ள அங்கு காணப்படுகின்ற கட்டிடங்கள், மற்றும் அனைத்துடனும் ஒன்பது தசம் ஏழு ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.9.75பே.) விஸ்தீரணத்தையும் கொண்டுள்ளதுடன் மேல்கூறப்பட்ட நிலவரைபட இல. 1693 துண்டு 1C கொழும்பு காணிப் பதிவகத்தில் தலைப்பு பரிமாணம் F117/67 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆர். ஏ. பி. ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

2022, பெப்புருவரி 07.

03-47

---

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கிளை : டுப்ளிகேஷன் றோட்
கடன் கணக்கு இலக்கம் : 2216088 மற்றும் 2427354
மாலித் யஹத்துகொட

2021, ஏப்பிறல் 28 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையின் கூட்டத்தில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது :

"அத்துடன் கடன்பட்டவராகிய அங்கொட இல. 1104/ 1, ஹில்டொப் குடியிருப்பு, பன்னிப்பிட்டிய வீதி பத்தரமுல்லையைச் சேர்ந்த மாலித் யஹத்துகொட என்பவர் பெற்ற கடனை திரும்ப செலுத்த தவறியதால் கொழும்பைச் சேர்ந்த நொத்தாரிசு ஆர். ஏ. எம். என். ராஜசூரிய என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு கொமர்ஷல் வங்கியின் சிலோன் பீஎல்சீ யில் அடைமானப் பத்திர இலக்கங்கள் 488, 2011, மே 12 ஆந் திகதி மற்றும் ; கொழும்பைச் சேர்ந்த நொத்தாரிசு எம். ஐ. அல்விஸ் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு கொமர்ஷல் வங்கியின் சிலோன் பீ. எல். சீ யில் அடைமானப் பத்திர இலக்கங்கள் 1095, 2014, யூன் 9 ஆந் திகதி திரும்ப செலுத்த தவறியதால் இது 2021, பெப்புருவரி 25 வரையான காலப்பகுதியில் வட்டியுடன் கொமர்ஷல் வங்கியின் சிலோன் பீ. எல். சீ. க்கு வருமதியாக உள்ளதாக கூறப்பட்ட அடைமானத்தால் ஒரு கோடியே அறுபத்தி ஐந்து இலட்சத்து ஆறாயிரத்து முப்பத்தி ஒரு ரூபா ஒரு சதம் (ரூபா 1,65,06,031.01) கடன் கணக்கு இல. : 2216088 மற்றும் 2427354 கொமர்ஷல் வங்கியின் சிலோன் பி. எல். சி. யில் திரும்பச் செலுத்த தவறியதால் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் (விஷேட ஏற்பாடுகள்) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆம் சிறப்புச் சட்டப்படி கீழ் குறிக்கப்பட்ட அட்டவணையில் சபை இயக்குநரின் தீர்மானத்திற்கு அமைய அடைமானப் பத்திர இலக்கங்கள் 488 மற்றும் 1095 கொண்ட சொத்தை கொமர்ஷல் வங்கியின் சிலோன் பீ. எல். சீ. யினரால் அங்கீகாரம் பெற்ற ரீ. என்ட் எச். ஒக்சன் அனுமதிபெற்ற ஏலதாரர் மற்றும் நீதிமன்ற ஆணையாளர், திரு. எம். எச். டி. கருணாரத்ன, இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்பவரால் பொது ஏல விற்பனை மூலம் விற்கப்பட்ட மேற்கூறப்பட்ட ஒரு கோடியே அறுபத்தி ஐந்து இலட்சத்து ஆறாயிரத்து முப்பத்தி ஒரு ரூபா ஒரு சதம் (ரூபா 1,65,06,031.01) தொகையுடன் 2021, பெப்புருவரி 26 முதல் விற்பனை நாள் வரையான உடன் மற்றைய 14.50% வருடாந்த வட்டித் தொகையான ரூபா 54,56,194.05 மற்றும் 15% வருடாந்த வட்டியாக ரூபா 8,442,000.00 விளம்பர தொகை உட்பட மற்றும் வேறு ஏதேனும் செலவுகளும் (ஏனையவும்) அறவிடப்படும்.

**மேல் குறிப்பிட்ட அட்டவணையில் கூறப்பட்ட விபரங்கள் :**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளேபத்து ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைக்குட்பட்ட கோட்டே பிரதேச செயலாளர் பிரிவில் பிட்ட கோட்டே மேற்கு 522 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பிட்டகோட்டையில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டு இல. 12, (பகுதி) ஆனந்த பாலிக்கா மாவத்தையில், "மரகஹாவத்த" என்றழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் எஸ். டீ. லியனசூரிய என்பவரினால் 1981, யூன் 30 இல் தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 2276 துண்டு 1 சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டு - வடகிழக்கு : துண்டு C (வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது) ; தென்கிழக்கு : வீதியும் ; தென்மேற்கு: துண்டு 2 மற்றும் ; வடமேற்கு : துண்டு D யும் எல்லையாக உள்ளதுடன் அங்கு காணப்படுகின்ற கட்டிடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் பதினான்கு தசம் ஒன்பது பேர்ச் (0ஏ.0றூ.14.9பே.) விஸ்தீரணத்தையும்

கொண்டுள்ளதுடன் மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 2276 துண்டு 1 கொழும்பு காணிப் பதிவகத்தில் தலைப்பு பரிமாணம் M 1033/241 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட சொத்து அண்மையில் மீளளவீடு செய்யப்பட்டதன் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது :

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பத்து ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கோட்டே பிரதேச செயலாளர் பிரிவில் பிட்டகோட்டே மேற்கு 522 கிராம அலுவலர் பிரிவுக்குட் பட்ட பிட்டகோட்டையில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டு இல. 12/1 A, 5 ஆம் ஒழுங்கை, ஆனந்த பாலிக்கா மாவத்தையில், "மரகஹாவத்த" என்றழைக்கப்படுகின்ற காணி (அனுமதிபெற்ற நில அளவையாளர் எஸ். டீ. வியனசூரிய என்பவரினால் 1981, யூன் 30 ஆந் திகதியில் தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 2276 துண்டு 1 மீளளவீடு செய்யப்பட்டது) அனுமதிபெற்ற நில அளவையாளர் ஏ. ஆர். சில்வா என்பவரினால் 2011, ஏப்பிறல் 07 இல் தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 4339 துண்டு 1 சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டு – வடக்கு : வரிமதிப்பீட்டு இல. 12/1C, ஆனந்த பாலிக்கா மாவத்தை மற்றும் தனியார் வீதி; கிழக்கு : தனியார் வீதி (20 அடி அகலமான பாதை) ; தெற்கு : 20 அடி அகலமான பாதை மற்றும் வளாகம் வரிமதிப்பீட்டு இல. 12/ 4, ஆனந்த பாலிக்கா மாவத்தை மற்றும் மேற்கு: வரிமதிப்பீட்டு இல. 12/ 4, ஆனந்த பாலிக்கா மாவத்தை மற்றும் வளாகம் 12/ 1C, எல்லையாக உள்ளதுடன் அங்கு காணப்படுகின்ற கட்டிடங்கள், மரங்கள், பயிர்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் பதிநான்கு தசம் ஒன்பது பேர்ச் (0ஏ.0றூ.14.9பே.) விஸ்தீரணத்தை நிலவரைபட இல. 4339 துண்டு கொண்டுள்ளது.

பொது விதிமுறைகளுக்கமைய அதன் மேலாகவும் அதனூடாகவும் பற்றிய காணியின் விபரம் பின்வருமாறு :

பிட்டகோட்டையில் அமைந்துள்ள "மரகஹாவத்த" என்றழைக்கப் படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் எச். ஜி. சீ. டயஸ் என்பவரினால் 1978, மாச்சு 02 இல் தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 1348 துண்டு F (வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது) சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டு வடகிழக்கு : அனுமதிபெற்ற நில அளவையாளர் எம். டீ. ஏ. ரூபசிங்க என்பவரால் 1953, பெப்புருவரி 14 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 440 துண்டு 1 தற்போது இது எச். ஏ. பெரேரா என்பவருடையது ; தென்கிழக்கு : வனிகசூரிய என்பவரின் காணியும் மற்றும் தென்மேற்கு : ஆனந்த பாலிக்கா மாவத்தை என்று அறியப்படுகிற 5 ஆம் ஒழுங்கையும் ; வடமேற்கு: துண்டுகள் E, D மற்றும் C (வீதிக்காக 10 அடி அகலமான பாதை ஒதுக்கப்பட்டுள்ளது) மற்றும் இது நிலவரைபட இல. 440 துண்டுகள் 2 மற்றும் 3 என்பவற்றின் ஒரு பகுதி எல்லையாக உள்ளதுடன் அங்கு காணப்படுகின்ற கட்டிடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் இருபத்திமூன்று தசம் ஆறு பேர்ச் (0ஏ.0றூ.23.6பே.) விஸ்தீரணத்தை நிலவரைபட இல. 1348 துண்டு கொண்டுள்ளது தலைப்பு/ பரிமாணம் M2469/213 தெல்கந்த-நுகேகொட காணிப்பதிவகத்தில் பதியப் பட்டுள்ளது.

ஆர். ஏ. பி. ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

2021, யூன் 14.

03-48

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்ரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால்செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்**.

**அட்டவணை - 2022**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாச்சு | .. | வெள்ளி | 04.03.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.02.2022 |
| | | வெள்ளி | 11.03.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.02.2022 |
| | | வெள்ளி | 18.03.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.03.2022 |
| | | வெள்ளி | 25.03.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.03.2022 |
| ஏப்பிறல் | .. | வெள்ளி | 01.04.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.03.2022 |
| | | வெள்ளி | 08.04.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.03.2022 |
| | | செவ்வாய் | 12.04.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.04.2022 |
| | | வெள்ளி | 22.04.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.04.2022 |
| | | வெள்ளி | 29.04.2022 | .. | நண்பகல் 12 | செவ்வாய் | 12.04.2022 |
| மே | .. | வெள்ளி | 06.05.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.04.2022 |
| | | வெள்ளி | 13.05.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.04.2022 |
| | | வெள்ளி | 20.05.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.05.2022 |
| | | வெள்ளி | 27.05.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.05.2022 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.